# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகச் சட்டம்

---

[*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024, சனவரி மாதம் 26 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 36.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகச் சட்டம்***

[*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ. 16 /2023*

**இலங்கையில் தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தி ஊக்குவிக்கும்பொருட்டு தேசிய ஒற்று மைக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை எடுத்துக்கூறுவதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற் றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*முன்னுரை*

இலங்கையில் சமூகப்-பொருளாதார அபிவிருத்திச் செயன்முறை யில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் தேவையும் முக்கியத்துவமும் அத்துடன் அவற்றை எய்துவதற்கான அர்ப்பணிப் பும் கருத்தொருமிப்பும் கவனத்துட்கொள்ளப்பட்டுள்ளதாதலா லும்:

அத்துடன், ஆளடையாளத்தைப் பாதுகாக்கும் அதேவேளையில் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளில் ஒவ்வொரு பிரசைக்கும் சமவாய்ப்புக்களை உறுதிப்படுத்து வதற்கென தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகமொன்றைத் தாபிப்பதும் மற்றும் பல்வகைமைக்கு மதிப்பளிக்கப்பட்டு எல்லாச் சமுதாயத்தினரும் ஒத்திணைவாகவும் ஒற்றுமையாகவும் சகவாழ்வுடன் உள்வாங்கும்தன்மையினதான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாக வந்துள்ளதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் பின்வருமாறு பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சட்டத்தின் குறிக்கோள்கள்*

**2.** பின்வருவன சட்டத்தின் குறிக்கோள்களாதல் வேண்டும் -

(அ) இலங்கையிலுள்ள எல்லா ஆட்களுக்கிடையேயும் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சமாதான சகவாழ்வை ஊக்குவித்து மேம்படுத்துதல்;

(ஆ) நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய தேசிய கொள்கையொன்றை வகுத்தமைத்து அரசாங்கத்திற்கு விதந்துரைத்தல்;

(இ) எல்லாச் சமூகங்களுக்கிடையேயும் புரிந்துணர்வு, ஒத்திணைவு மற்றும் ஒற்றுமையைக் கட்யெழுப்புவதற்கு உதவக்கூடிய தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங் களையும் நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளித்தல்;

(ஈ) வேறுபட்ட சமூகங்களினுள்ளும் மற்றும் அச்சமூகங் களுக்கிடையேயும் பதட்டங்களையும் மோதல்களையும் ஏற்படுத்துகின்ற கருமங்களைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கத்திற்கு விதந்துரைத்தல்;

(உ) சமாதானம் மற்றும் தேசிய ஒற்றுமை முன்முயற்சிகளில் ஒத்திசைவை எய்தும்பொருட்டு நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு குறித்துப் பணியாற்றுகின்ற அக்கறை கொண்டோருக்கு உதவியளித்தல்; அத்துடன்

(ஊ) தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் எய்தும் நோக்கத்துக்காக, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் அல்லது ஏதேனும் அசாங்கக் கொள்கையின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் பெருமுயற்சினால் செய்யப் பட்ட விதப்புரை எதனதும் நடைமுறைப்படுத்துகைக்கு உதவுதலும் அதனை வசதிப்படுத்துதலும்.

பாகம் I

## தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தைத் தாபித்தல்

*தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத் திற்குமான அலுவலகத் தைத் தாபித்தல்*

**3.** (1) (இதனகத்துப்பின்னர் "நல்லிணக்க அலுவலகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணத்திற்கு மான அலுவலகம்" எனவழைக்கப்பட்டு அறியப்படவேண்டிய அவலகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நல்லிணக்க அலுவலகமானது இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அதன் கூட்டிணைப்புப் பெயரில் வழக்குத்தொடுக்கலாம் மற்றும் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(3) நல்லிணக்க அலுவலகத்தின் தலைமையகம் கொழும்பில் அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் நல்லிணக்க அலுவலகம் காலத்துக்குக்காலம் அதன் பணிப்பாணையை எய்துவதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கை யினவான பிராந்திய அலுவலகங்களையும் தாபிக்கலாம்.

*நல்லிணக்க அலுவலகத்தின் அமைப்புவிதி*

**4.** (1) நல்லிணக்க அலுவலகம் பின்வருவோரைக் கொண்டி ருத்தல் வேண்டும் -

(அ) அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவா றானவரும் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வருமான பதவிவழி உறுப்பினரொருவர்; அவர், அமைச்சரின் அமைச்சினது மேலதிகச் செயலாளர் எனும் பதவி வரிசைக்குக் குறையாத அலுவல ரொருவராக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) (இதனகத்துபின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர் கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (2) ஆம் உட் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செய்யப்பட்ட அமைச்சரின் விதப்புரையின் மீது சனாதிபதி யினால் நியமிக்கப்பட்ட வேறு பத்து உறுப்பினர்கள்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்களை நியமிப்பதற்காக விதப்புரைகளைச் செய்வதில், அமைச்சர் பின்வருவனவற்றுக்கு உரிய கவனத்தைச் செலுத்துதல் வேண்டும் -

(அ) நல்லிணக்க அலுவலகத்தின் அமைப்பு இலங்கைச் சமூகத்தின் பல்லினத் தன்மையைப் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துவதற்கும்;

(ஆ) நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு விதந்துரைக்கப்பட்ட ஆட்கள் மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், நல்லிணக்கம் மற்றும் சமூக ஒத்திணைவு, தேசிய ஒற்றுமை, முகாமைத்துவம், கருத்திட்ட திட்டமிடல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி ஆகிய துறைகளுள் ஒன்றில் அல்லது ஒன்றுக்குமேற்பட்டவற்றில் கீர்த்தியும் அனுபவமும் பெற்றுள்ள ஆட்களாக இருத்தல் வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்கும்; அத்துடன்

(இ) நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு விதந்துரைக்கப்பட்ட ஆட்கள் 5 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகைமையீனத்துக்கு உட்படாதவர்கள் என்பதனை உறுதிப்படுத்துவதற்கும்.

(3) சனாதிபதி, அமைச்சரின் விதப்புரையின்மீது, உறுப்பினரொருவரை நல்லிணக்க அலுவலகத்தின் தவிசாளராக நியமிக்கலாம்.

*நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பினரொருவராக இருப்பதற்கான தகைமையீனங்கள்*

**5.** ஆளொருவர் -

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(இ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக்கொண்ட நீதிமன்றமொன்றினால் கடனிறுக்கவகையற்ற ஒருவராகத் தீர்ப்பளிக்கப்பட்டால்;

(ஈ) சனாதிபதியின் அபிப்பிராயத்தில், அமைச்சரின் விதப்புரையின்மீது உருவாக்கப்பட்டதும் நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பினரொருவராக அவரது கடமைகளுடன் முரண்படுகின்றதுமான அக்கறை முரண்பாடொன்றைக் கொண்டுள்ளவராக இருந்துவந்தால் அல்லது காணப்பட்டால்;

(உ) சுகவீனம் காரணமாக அல்லது வேறு உள அல்லது உடல் தகுதியீனம் காரணமாக பதவியில் தொடர்ந்திருப்பதற்குத் தகுதியற்றவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(ஊ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக்கொண்ட நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவரென வெளிப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால்;

(எ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவித்திருந்தால் அல்லது அனுபவித்துக்கொண்டிருந்தால்; அல்லது

(ஏ) நல்லிணக்க அலுவலகத்தின் முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருந்தால்,

அத்தகைய ஆள், நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையீனமுடையவராதல் வேண்டும்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம்*

**6.** (1) நல்லிணக்க அலுவலகத்தின் நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், அத்தகைய உறுப்பினர் இறப்பினால், பதவிவிலகுகையினால் அல்லது பதவியகற்றப்படுகையினால் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர் பதவியகற்றப்பட்டிருந்தாலொழிய, அவர் மேலுமொரு பதவிக்காலத்துக்கு மேற்படாத பதவிக் காலத்துக்கு, தொடர்ச்சியானதாயினுஞ்சரி அல்லது வேறுவகையானதாயினுஞ்சரி, மீள நியமிக்கப்படத் தகவுடையவராதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக, நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் எக்காலப்பகுதிக்கு பதிற்கடமையாற்றும் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுகின்றாரோ அக்காலப்பகுதி, இப்பிரிவின் பொருளுக்குட்பட "பதவிக்காலம்" ஒன்றாகக் கருதப்படுதலாகாது.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவியகற்றுகையும் பதவிவிலகுகையும்*

**7.** (1) நல்லிணக்க அலுவலகத்தின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் பதவி -

(அ) அத்தகைய உறுப்பினர் இறப்பதன்மேல்;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அத்தகைய உறுப்பினர் அத்தகைய பதவியிலிருந்து விலகுவதன்மேல்;

(இ) பிரிவு 5 இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏதுவின் மீது அத்தகைய உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல்; அல்லது

(ஈ) அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலம் முடிவுறுவதன்மேல்,

வறிதாதல் வேண்டும்.

(2) நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பினரொருவர், அத்தகைய ஆள் நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பினரொருவராக

இருப்பதற்கு 5 ஆம் பிரிவின்கீழ் தகைமையீனமுடையவராக வந்தால், சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(3) தவிசாளர், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம்.

(4) ஒராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம், நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

(5) (அ) நல்லிணக்க அலுவலகத்தின் தவிசாளர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையிலில்லாமை அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக வந்தால், சனாதிபதி, 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளராகச் செயலாற்றுவதற்கென நல்லிணக்க அலுவலகத்தின் வேறெவரேனும் உறுப்பினரை நியமிக்கலாம்

(ஆ) நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையிலில்லாமை அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக வந்தால், சனாதிபதி, 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய காலப்பகுதிக்கு அத்தகைய உறுப்பினரின் இடத்தில் தற்காலிகமாகச் செயலாற்றுவதற்கென வேறெவரேனும் தகைமையுள்ள ஆளை நியமிக்கலாம்.

(6) நல்லிணக்க அலுவலகத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

*நல்லிணக்க அலுவலகத்தின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்*

**8.** (1) தவிசாளர் நல்லிணக்க அலுவலகத்தின் எல்லாக் கூட்டங் களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். நல்லிணக்க அலுவலகத் தின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகை தராதிருப்பின், அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்கள், அத்த கைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்கென நல்லிணக்க அலுவல கத்தின் உறுப்பினர்களுள் இருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) நல்லிணக்க அலுவலகத்தின் அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தலைமைதாங்குகின்ற தவிசாளர் அல்லது உறுப்பினர், அவரது சொந்த வாக்குடன்சேர்த்து அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) நல்லிணக்க அலுவலகத்தின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, நல்லிணக்க அலுவலகமானது, அதன் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை ஆக்கலாம்.

## பாகம் II

## நல்லிணக்க அலுவலகத்தின் பணிப்பாணை, தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

*நல்லிணக்க அலுவலகத்தின் பணிப்பாணை*

**9.** நல்லிணக்க அலுவலகம் பின்வருவனவற்றுக்கான பணிப் பாணையைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இலங்கையில் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானம் என்பவற்றை எய்துவதற்கான விதப்புரைகளை அரசாங்கத்திற்கும் இயைபான அதிகாரிகளுக்கும் செய்தல்;

(ஆ) நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய தேசியக் கொள்கையொன்றையும் மற்றும் தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றையும் வகுத்தமைத்தல்;

(இ) இலங்கையில் தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத் தையும் ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வசதிப்படுத்துதலும் நடைமுறைப்படுத்துதலும் மற்றும் அதன் நடைமுறைப்படுத்துகையைக் கண்காணித்தலும்; அத்துடன்

(ஈ) தேசிய ஒற்றுமைக்குப் பாதகமான விளைவுகளைக் கொண்டுள்ளவையும் வேறுபட்ட சமூகங்களினுள்ளும் அவற்றுக்கிடையேயும் பதட்டங்களையும் மோதல்களை யும் ஏற்படுத்துகின்றவையுமான கருமங்களைத் தீர்ப்ப தற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கத்திற்கு விதந்துரைத்தல்.

நல்லிணக்க அலுவலகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

**10.** நல்லிணக்க அலுவலகம் பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) இலங்கையில் தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத் தையும் கட்டியெழுப்புவதற்கான இயைபான கருமங்கள் மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் பணிப்பாணை யில் குறித்துரைக்கப்பட்ட வேறு கருமங்கள் என்பன பற்றி அரசாங்கத்திற்கும் இயைபான அதிகாரிகளுக்கும் விதப்புரைகளைச் செய்தல்;

(ஆ) நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைத்தலும் மற்றும் அதன் நடைமுறைப்படுத்துகைக்கு உதவுதலும்;

(இ) இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கி நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய தேசிய செயற்பாட்டுத் திட்ட மொன்றை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத் துதலும்;

(ஈ) இன, மத, மொழி, சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணிகளின் நிமித்தம் இலங்கைச் சமூகத்தின் சமூகப் படிநிலைகளினுள் இன்னலுற்ற ஆட்களை அல்லது ஆட்களின் குழுக்களை அடையாளங் காணுதல்;

(உ) நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய தேசிய செயற் பாட்டுத் திட்டத்தினுள், (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களுக்கான அல்லது ஆட்களின் குழுக்களுக்கான உறுதிப்படுத்தும் நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்;

(ஊ) நல்லிணக்கத்தை நோக்கியவையும் தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துகின்றவையுமான முயற்சிகளைப் பின்பற்றுதலும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்திரும்புகையும் மீள்குடியேற்றமும் அத்துடன் சம்பந்தப்பட்ட ஆட்களின் புனர்வாழ்வும் மீள் ஒன்றிணைப்பும் போன்ற மோதலுக்குப் பின்னரான; அத்துடன் கரிசனைகளை விளித்துரைத்தலும்;

(எ) நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய தேசியக் கொள்கை குறித்தும் தேசிய செயற்பாட்டுத் திட்டம் குறித்தும் பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் கல்விப் பிரசாரங்கள் என்பவற்றை அங்குரார்ப்பணம் செய்தல்;

(ஏ) அரசாங்க நிறுவனங்களுக்குள்ளான நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய தேசியக் கொள்கையில் வரையறுத்துக்கூறப்பட்ட விழுமியங்களையும் மற்றும் வருடாந்த வேலைத்திட்டங்களுக்கூடாக ஏலவேயுள்ள தேசிய முன்முயற்சிகளையும் பிரதானமயப்படுத்துதல்;

(ஐ) தேசிய ஒருமைப்பாட்டுக்கான தடைகளை அடையாளங் கண்டு இயைபான அக்கறைகொண்டுள்ளோருடனான

கலந்துரையாடலினதும் கருத்தொருமிப்பினதும் அடிப்படையில் பொருத்தமான நடவடிக்கையை எடுத்தல்;

(ஒ) நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பான கருமங்களைக் கையாளுகின்ற அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் வேறு நிறுவனங்களுடன் கூட்டுழைப்புடன் செயலாற்றுதல்;

(ஓ) தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றவையும் மற்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளவையுமான பல்வேறு மூலோபாயங்களை மீளாய்வு செய்தலும் மற்றும் அத்தகைய மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதில் உதவுதலும்;

(ஔ) தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் நீடித்துநிலைக்கும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பவற்றுக்காகத் தேவைப்படும் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றி இயைபான அக்கறை கொண்டோருடனான கலந்தாலோசனைக்கான விதப்புரைகளை அரசாங்கத்துக்கும் மற்றும் வேறு இயைபான அதிகாரிகளுக்கும் செய்தல்;

(க) பின்வருவனவற்றுக்காக இயைபான அதிகாரிகளுக்கு உதவுதல் -

(i) தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கமும் சகவாழ்வும் மற்றும் தேசிய ஒத்திணைவு என்பவற்றை ஊக்குவித்தல் பற்றிய நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதலும் மற்றும் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை மாவட்ட மட்டத்திலான அபிவிருத்தித் திட்டங்களினுள் ஒருங்கிணைத்தலும்;

(ii) தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை எய்தும் நோக்கத்துக்காக, ஏதேனும் சட்டத்தின் கீழ் அல்லது அரசாங்கத்தின் ஏதேனும் கொள்கையின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் நல்லிணக்கப் பெருமுயற்சியினால் செய்யப்பட்ட விதப்புரைகளை நடைமுறைப்படுத்துதல்;

(iii) சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயன்முறையில் வெளிப்படக்கூடிய சிக்கல்களுக்கான தோதான தீர்வுகள் பற்றிய முன்மொழிவுகளைச் செய்வதன்மூலம் அத்தகைய சிக்கல்களைத் தீர்த்துவைத்தல்; அத்துடன்

(iv) இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்களினதும் கருத்திட்டங்களினதும் நடைமுறைப்படுத்துகைக்கான நிதிகளை நாடுதல்;

(ங) இச்சட்டத்தின் குறிக்கோள்களை ஊக்குவிக்கும் கருத்துடன் வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் குடிமைச் சமூகத்தினருடன் தொடர்புறுதலும் ஒருங்கிணைந்து செயலாற்றுதலும்;

(ச) சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புக்கள் உட்பட, உள்நாட்டு ஒழுங்கமைப்புக்களினால் நடாத்தப்படும் சமாதானம் மற்றும் நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவுதல், அவற்றை நெறிப்படுத்துதல் மற்றும் வசதிப்படுத்துதல்;

(ஞ) நல்லிணக்க அலுவலகத்தின் நிருவாகமுட்பட, அதன் வினைத்திறனான பணியாற்றுகையை உறுதிப்படுத்துவதற்கான விதிகளை ஆக்குதல்;

(ட) காலத்துக்குக்காலம் விதிகளை ஆக்குதலும் மற்றும் வழிகாட்டுநெறிகளை வழங்குதலும்; அவை, நல்லி

ணக்க அலுவலகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல், மற்றும் நிறை வேற்றுதல் தொடர்பில் அவ்வலுவலகத்தின் பணியாட் டொகுதியினரால் கடைப்பிடிக்கப்படவேண்டிய பால்நிலை மற்றும் சிறுவர் பதிலிறுத்தற் கொள்கைகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்;

(ண) நல்லிணக்க அலுவலகத்தின் அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமித்தல், தொழிலில் அமர்த்துதல் மற்றும் பதவிநீக்குதல் மற்றும் அத்தகைய அலு வலர்கள்மீதும் ஊழியர்கள்மீதும் ஒழுக்காற்றுக் கட்டுப் பாட்டைப் பிரயோகித்தல்;

(த) நல்லிணக்க அலுவலகத்துக்கு பகிரங்க அலுவலர் களின் மாற்றுச்சேவையைக் கோருதல்; அத்துடன்

(ந) நல்லிணக்க அலுவலகத்தின் வினைத்திறனான நிருவாகத்துக்கும் பணியற்றுகைக்கும் தேவைப்படுத் தப்படுகின்றவாறான குழுக்களை நியமித்தலும் மற்றும் இச்சட்டத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்ட ஏதேனும் அலகு அல்லது பிரிவுக்கு மேலதிகமான பிரிவுகளையும் அலகுகளையும் தாபித்தலும் மற்றும் அத்தகைய குழுக்களுக்கும், பிரிவுகளுக்கும் மற்றும் அலகுகளுக்கும் அவசியமானவாறான அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் கையளித்தலும்.

## பாகம் III

## செயலகம்

**11.** (1) நல்லிணக்க அலுவலகமானது செயலகமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்; நல்லிணக்க அலுவலகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் பொறுப்பு அச்செயலகத்திற்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும். செயலகம்

(2) நல்லிணக்க அலுவலகம் பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரை நியமித்தல் வேண்டும்; அவர், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத் துறையில் தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள ஆளொருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன், நல்லிணக்க அலுவலகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(3) நல்லிணக்க அலுவலகமானது அதன் தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதற்கு உதவுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் சேவையாளர்களும் நல்லிணக்க அலுவலகத்தினால் நியமிக்கப்படலாம்.

நல்லிணக்க அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்

**12.** (1) நல்லிணக்க அலுவலகத்தின் கோரிக்கையின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலரெவரும், அவ்வலுவலரினதும் மற்றும் பொது நிருவாகம் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் நல்லிணக்க அலுவலகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நல்லிணக்க அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதனையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், நல்லிணக்க அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், நல்லிணக்க அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பாகம் IV

## நிதி மற்றும் அறிக்கையிடுதல்

நிதிகள்

**13.** இச்சட்டத்தினால் நல்லிணக்க அலுவலகத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அவ்வலுவலகத்தை இயலச்செய்விப்பதற்கு அரசானது நல்லிணக்க அலுலகத்துக்குப் போதிய நிதிகளை வழங்குதல் வேண்டும். அத்தகைய நிதிகள் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பினர் களது சம்பளங்கள்

**14.** நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பினர்களது சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவர்களின் பதவிக்காலங்களின்போது குறைக்கப்படுதலுமாகாது.

நல்லிணக்க அலுவலகம் நிதிகளைத் திரட்டுதல்

**15.** நல்லிணக்க அலுவலமானது -

(அ) இலங்கையினுள் மானியக்கொடைகள், கொடைகள் அல்லது அறக்கொடைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் பணிப்பாணையை எய்துவதற்காக இலங்கைக்கு வெளியேயிருந்து மானியக்கொடைகள், கொடைகள் அல்லது அறக்கொடைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலமும்,

நிதிகளைத் திரட்டலாம்:

ஆயின், (ஆ) என்னும் பந்தியின்கீழான நிதிகள் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

நிதியாண்டு

**16.** (1) நல்லிணக்க அலுவலகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) நல்லிணக்க அலுவலகமானது அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றி முறையான கணக்குகள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) நல்லிணக்க அலுவலகத்தின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

அறிக்கையிடுதல்

**17.** நல்லிணக்க அலுவலகமானது அதன் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுட்பட வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிக்கைகள் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து ஒருமாத காலப்பகுதிக்குள் அத்தகைய அறிக்கைகள் பகிரங்கப் படுத்தப்படுவதைச் செய்வித்தலும் வேண்டும்.

பாகம் V

**பொது**

தவறுகள்

**18.** (1) (அ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள், அவருக்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அத்தகைய ஆளை முறைகேடாக எதிர்க்கின்ற அல்லது அத்தகைய ஆளுக்கு முட்டுக்கட்டையிடுகின்ற;

(ஆ) நல்லிணக்க அலுவலகம் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிக்கையில், புரிகையில் மற்றும் நிறைவேற்றுகையில் அறிந்துகொண்டே அவ்வலுவலகத்துக்குத் தடங்கல் செய்கின்ற அல்லது முட்டுக்கட்டையிடுகின்ற; அல்லது

(இ) நல்லிணக்க அலுவலகத்துக்கு வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்குகின்ற,

எவரேனுமாள், நல்லிணக்க அலுவலகத்தின் அதிகாரத்துக்கெதிரான அவமதிப்புத் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) நல்லிணக்க அலுவலகமானது, ஆளொருவர் நல்லிணக்க அலுவலகத்தின் அதிகாரத்துக்கெதிரான அவமதிப்புத் தவறொன்றைப் புரிந்துள்ளாரென்று நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய விடயத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுதல் வேண்டும். நல்லிணக்க அலுவலகத்தின் அதிகாரத்துக்கெதிராகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறொவ்வொன்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத் துக்கெதிராகப் புரியப்பட்ட ஓர் அவமதிப்புத் தவறென்றாற்போன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

**19.** (1) (அ) நல்லிணக்க அலுவலகத்தின் அல்லது அதன் எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளரின் கட்டளை, முடிபு, செயல் அல்லது செய்யாமை எதுவும் அரசியலமைப்பின் 126 ஆம் அல்லது 140 ஆம் உறுப்புரையின்கீழான வழக்குநடவடிக்கைகளிற்றவிர, எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப் படுதலாகாது. வழக்குக் கெதிரான பாதுகாப்பு

(ஆ) நல்லிணக்க அலுவலகத்தின் அல்லது எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளரின் ஏதேனும் கட்டளை, முடிபு, செயல் அல்லது செய்யாமை தொடர்பாக அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட எழுத்தாணை நியாயாதிக்கம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினாலல்லாது உயர் நீதிமன்றத்தினால் பிரயோகிக் கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட சூழ்நிலைகளிற்றவிர –

(அ) நல்லிணக்க அலுவலகத்தின் எவரேனும் உறுப்பினர் அல்லது நல்லிணக்க அலுவலகத்துக்கு உதவிபுரிவ தற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது

சேவையாளருக்கெதிராக, அத்தகைய உறுப்பினர் அல்லது அலுவலர் அல்லது சேவையாளர் என்ற முறையில் நல்லெண்ணத்துடன் அவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயலுக்காக, நல்லிணக்க அலுவலகத்தின் அதிகாரத்துக்கெதிரான அவமதிப்புக்காகவன்றி, குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் நல்லிணக்க அலுவலகத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில் நல்லிணக்க அலுவலகத்தின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது அத்தகைய அறிக்கையின் உண்மையான விபரம் வேறெவரேனும் ஆளினால் வெளியிடப்பட்டமை தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது; அத்துடன்

(இ) எவரேனுமாள் நல்லிணக்க அலுவலகத்துக்குச் சான்றை அல்லது ஆவணப்படுத்துகையை நல்லெண்ணத்துடன் வழங்குவதன் விளைவாக அத்தகைய ஆளுக்கெதிராகக் குடியியல், குற்றவியல் அல்லது நிருவாக வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

விதிகள்

**20.** (1) எக்கருமங்களுக்காக இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்பட வேண்டுமென்று தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்களுக்காக நல்லிணக்க அலுவலகம் விதிகளை ஆக்கலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் பாராளுமன்றத்தின்முன் கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன் மூன்று மாதங்களை விஞ்சாத நியாயமானவொரு காலப்பகுதியினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

உறுப்பினர்கள் முதலியோர் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்

**21.** நல்லிணக்க அலுவலகத்தின் உறுப்பினர்களும் (இச்சட்டத்தின்கீழான அவர்களின் பணிகளின் வரையறுக்கப்பட்ட நோக்கத்துக்காக) மற்றும் அலுவலர்களும் சேவையாளர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவை, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டம் மற்றும் (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச்சட்டம் என்பவற்றின் நோக்கங்களுக்காகப் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

நல்லிணக்க அலுவலகம் அட்ட வணைப்படுத் தப்பட்ட நிறுவன மொன்றாக இருத்தல்

**22.** நல்லிணக்க அலுவலகமானது 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தெல்லையினுள், அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

தத்துவங்களைக் கையளித்தல்

**23.** (1) நல்லிணக்க அலுவலகம் அதன் தத்துவங்கள் மற்றும் பணிகளுள் எதனையும் அதனது பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது வேறெவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) எந்த பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு நல்லிணக்க அலுவலகத்தின் தத்துவங்கள் அல்லது பணிகளுள் எதுவும் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த பணிப்பாளர் தலைமையதிபதி, உறுப்பினர் அல்லது அலுவலர் அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் நல்லிணக்க அலுவலகத்தின் பொதுவான அல்லது குறிப்பான பணிப்புக்களுக்கமைய பிரயோகித்தல் அல்லது புரிதல் வேண்டும்.

பொருள்கோடல்

**24.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

“அமைச்சர்” என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் நல்லிணக்க அலுவலகம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்; அத்துடன்

"சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புக்கள்" என்பது, குறிப்பான சமுதாயத்தினுள் அல்லது பிரதேசத்தினுள் அடிமட்டத்தில் தொழிற்படுகின்ற ஓர் இலாபநோக்கற்ற அல்லது அரசசார்பற்ற ஒழுங்கமைப்பு எனப் பொருள் படும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**25.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

## அட்டவணை

(பிரிவு 10(இ))

**நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்கள்**

1. எல்லா சமூகத்தினரிடையேயும் விழிப்புணர்வையும் சமாதானத்தையும் மற்றும் ஒற்றுமையையும் கட்டியெழுப்பும் வகையில் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை உறுதிப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றின் பின்தொடர் கண்காணிப்பும்.

2. சட்டவாட்சி, அடிப்படை உரிமைகள், சுதந்திரம், சமூகக் கடப்பாடுகள், பரஸ்பர மரியாதை, பாரபட்சமின்மை, ஒப்புரவு மற்றும் பல்வகைமை என்பவற்றுக்கு மதிப்பளிக்கின்ற சமூகமொன்றை உருவாக்குவதற்கான பன்முக அக்கறைகொண்டோர் முயற்சியொன்றை ஊக்குவிப்பதற்கும் வினையூக்கப்படுத்துவதற்குமான நிகழ்ச்சித்திட்டங்கள்.

3. நல்லிணக்கம் பற்றிய கருத்தாடலை ஊக்குவிப்பதற்கும், கருத்தொருமிப்பைக் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் உருவாகிவரும் மோதல்களுக்கான முன்னெச்சரிக்கையையும் பதிலிறுப்பையும் வழங்குவதற்குமென பிராந்திய மட்டத்திலிருந்து தேசிய மட்டம்வரை வடிவமைக்கப்பட்டதும் தாபிக்கப்பட்டதுமான ஒத்திசைவான வலையமைப்புப் பொறிமுறையொன்றைத் தாபிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.

4. பாடசாலைகள், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்கள் உட்பட கல்வி முறைமையில் நல்லிணக்கத்தையும் சமூக ஒத்திசைவையும் ஊக்குவிப்பதற்கான ஆளுகையையும் கொள்கைகளையும் மற்றும் பாடத்திட்டங்களையும் வலுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.

*2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய ஒற்றுமைக்கும் 21*
*நல்லிணக்கத்துக்குமான அலுவலகச் சட்டம்*

5. *இழப்புக்களைச் சந்தித்த சமுதாயத்தினரிடையே நல்லிணக்கத்தை வளர்த்தெடுப்பதனை வலுப்படுத்துவதற்கு ஒருங்கிணைப்பு, மதிப்பீடு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுசெய்தல் உள்ளடங்கலாக, உளசமூகக் கவனிப்பையும் ஆதரவு முறைமையையும் உருவாக்கு வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்*

6. *இயைபான அமைச்சுக்களுடனும், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடனும் கலந்தாலோசித்து, வன்முறைசார் தீவிரவாதத்தைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்ட மொன்றை வகுத்தமைப்பதற்கான நிகழ்சித்திட்டங்கள்.*

7. *வெவ்வேறு சமூகங்களுடக்கிடையே நிலைகொண்டுள்ள அழுத்தங் களையும் மோதல்களையும் விளைவிக்கின்ற சிக்கல்கல்களைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படவேண்டிய வழிமுறைகள் பற்றியும் மற்றும் அத்தகைய வழிமுறைகளின் நடைமுறைப்படுத்துகையும் பின்தொடர் கண்காணிப்பும் பற்றியும் அரசாங்கத்துக்கு விதப்புரை களைச் செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.*

8. *சமூக ஒருமைப்பாடு, கல்வி, மோதல் நிலைமாற்றம், உளசமூக ஆதரவுக் கருத்திட்டங்கள், கலைகளும் கலாசாரமும், விழிப்புணர்வுருவாக்கமும் சமூகமயப்படுத்துகையும், ஒட்டுமொத்த மாவட்ட அபிவிருத்தி மற்றும் உள்நாட்டுப் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின்கீழான பொருளாதார ஈடுபாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள், பெண்களினதும் இளைஞர்களினதும் ஒருமைப்பாட்டுக்கான விசேட கவனக்குவிவுடனான வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றின்மீது கவனக்குவிவைச் செலுத்தும் கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*